**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்**

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்

2025 ஆம் வருடம் ஜுலை மாதம் 07-ஆம் நாள், திங்கள்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் ஆனி மாதம் 23-ம் நாள் திங்கள்கிழமை

**இ.ம.எண்.01/2020 இன் அ.வ.எண்.275/2015**

ஆஞ்சயன் ரகு ... மனுதாரர் / வாதி

/எதிர்/

1) சங்கீதகனி
2) பிரபாகரன் ... எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

(Amended as per order in I.A.No.04/2023 dated 22.01.2024)

இம்மனுவானது 27.06.2025 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E. இராவணசிவன் அவர்கள் ஆஜராகியும், 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T. சுதாகர் அவர்கள் ஆஜராகியும், 1வது எதிர்மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கானது அற்றுபோற்விட்டது, இருதரப்பு வாத உரையை கேட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.07 16:29:54 +0530

17 ன்கீழ் மனுவில் கண்ட சீர்திருத்த விவரப்படி வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய அனுமதிக்க கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்::-

அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது தற்பொழுது கட்டாய விசாரணைக்காக 02.01. 2020 ல் வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், கடந்த 01.10.2018 அன்று எதிர்மனுதாரர்/ பிரதிவாதி பிரச்சினைக்குரிய 2ம் தபசில் சொத்தை வலுக்கட்டாயமாக சுவதீனம் எடுத்துவிட்டார். அதோடு அல்லாது 2ம் தபசில் சொத்தில் கட்டுமானமும் செய்துவிட்டார். அவ்வாறு கட்டுமானம் செய்வதற்கு வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தில் எவ்வித அனுமதியும் பெறவில்லை. பிரச்சினைக்குரிய 2ம் தபசில் சொத்தை எதிர்மனுதாரர்/ எதிர்வாதி வலுக்கட்டாயமாக சுவாதீனம் எடுத்துவிட்டதால் அதுவகைக்கு வழக்குரையில் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி உத்தேச திருத்தத்தால் வழக்கின் தன்மை மாறக்கூடியதல்ல என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2) 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. உண்மையில், வழக்கு 2ம் தபசில் சொத்து என்பது ஸ்தலத்தில் தனித்து கிடையாது எனவும், புல எண்.125/3-ல் உள்ள 15 செண்ட் நிலமானது இந்த எதிர்மனுதாரர் மற்றும் அவரது குமாரர்கள் விஜயபாலன், செந்தில் முருகன் ஆகியோர்கள் சேர்ந்து மேற்படி எதிர்மனுதாரரின் மற்றொரு குமாரரான பிரபாகரன் அவர்களுக்கு 02.06.2009ம் தேதியில் பாக பாத்திய

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.07 16:30:02 +0530

விடுதலை ஆவணம் எழுதிக் கொடுத்துவிட்டனர் எனவும், அன்று முதல் மேற்படி 15 செண்ட் நிலமும் பிரபாகரனுக்கு பாத்தியப்பட்டு மேற்படி பிரபாகரனால் மேற்படி 15 செண்ட் நித்தினையும் சுற்றி வேலி அமைக்கப்பட்டு மேற்படி பிரபாகரனால் மேற்படி 15 செண்ட் நிலத்தினையும் சுற்றி வேலிஅமைக்கப்பட்டு, மேற்படி பிரபாகரன் அனுபவத்திலேய உள்ளது எனவும், ஏற்கனவே இந்த எதிர்மனுதாரர் தரப்பில் அசல் வழக்கில் 08.06.2016 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் மிகவும் தெளிவாக கூறப்பட்டுள்ளது. இந்நிலையில், தற்போது புதிதாக 01.10.2018 அன்று பிரதிவாதி வழக்கில் அல்லாத 2 ம் தபசில் சொத்தினை வலுக்கட்டாயமாக சுவாதீனம் எடுத்துவிட்டதாக கூறி பொய்யாக காலம்கடந்து தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. மேலும்,அசல் வழக்கு பரிகாரமும் ஏற்கனவே அற்றுபோனதாகும். எனவே, மனுதாரர் மனுவில் கூறியுள்ள சீர்திருத்த விபரங்கள் ஏற்புடையதல்ல. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

<u>இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?</u>

3) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில், கடந்த 01.10.2018 அன்று எதிர்மனுதாரர்/ பிரதிவாதி பிரச்சினைக்குரிய 2 ம் தபசில் சொத்தை வலுக்கட்டாயமாக சுவதீனம் எடுத்துவிட்டார். அதோடு அல்லாது 2 ம் தபசில் சொத்தில் கட்டுமானமும் செய்துவிட்டார். பிரச்சினைக்குரிய 2 ம் தபசில் சொத்தை எதிர்மனுதாரர்/ எதிர்வாதி வலுக்கட்டாயமாக சுவாதீனம் எடுத்துவிட்டதால் அதுவகைக்கு வழக்குரையில் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி உத்தேச திருத்தத்தால் வழக்கின் தன்மை மாறக்கூடியதல்ல என மிகவும் அவசியமானது என கூறியுள்ளார்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.07 16:30:09 +0530

4. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த வழக்கில் தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சினை முற்றிலுமாக தீர்மானிக்க இம்மனுவில் கூறப்படும் திருத்தம் அவசியமானது. மனுதாரரால் கூறப்படும் திருத்தத்தால் இவ்வழக்கின் தன்மை எவ்விதத்திலும் மாறபோவதில்லை. மேலும், தரப்பினர்களுக்கிடையே பல்வேறு வழக்குகள் இது தொடர்பாக எழாமல் தடுக்கவும் மற்றும் நீதியின் நலனை கருத்தில் கொண்டும் இம்மனுவானது அனுமதிக்கப்படதக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 07-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.07 16:30:16 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>-இல்லை

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.07 16:30:21 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

முு.மா.உ.நீதிமன்றம்,வள்ளியூர்,

வரைவு, சீரான உத்தரவு

இ.ம.எண்.01/2020 இன்

அ.வ.எண்.275/2015

தேதி.07.07.2025